"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# தமிழ்மொழி

## ஆண்டு 3

| நேரம்: 90 நிமிடம் | சுட்டெண்: : |
| --- | --- |

# பொதுத்தேர்வு – 2018

# பகுதி 1

**1. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. ‘கற்பகதரு’ என அழைக்கப்படுவது
   (தென்னைமரம், பனைமரம், வாழைமரம்)
2. எனது அம்மாவின் அம்மா எனக்கு
   (பெரியம்மா, சின்னம்மா, அம்மம்மா)
3. நிலவன் மிருதங்கம்
   (அடித்தான், மீட்டினான், வாசித்தான்)
4. ஓர் எழுத்துச் சொல்லாக அமைவது
   (பூ, இரு, சிரி)
5. 300 என்பதன் எழுத்து வடிவம்
   (முன்னூறு, முந்நூறு, முன்நூறு)
6. ஜெனீவா நகரில் பேசப்படும் மொழி
   (ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு)
7. இன்று சனிக்கிழமை. நாளை மறுநாள்
   (திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை)
8. தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளுள் ஒன்று
   (கிரிக்கட், கிளித்தட்டு, ரெனிஸ்)
9. எமது கையில் உள்ள நான்காவது விரல்
   (சுட்டுவிரல், ஆள்காட்டிவிரல், மோதிரவிரல்)
10. இந்து சமுத்திரம் தந்திடும் முத்தங்கள்…என்ற பாடலைப் பாடியவர்
    (பாரதியார், புதுவை இரத்தினதுரை, பாரதிதாசன்)
11. மக்கள் சேர்ந்து வேலை செய்யும்போது பாடப்பெறுவது
    (தாலாட்டு, ஒப்பாரி, குழுப்பாடல்)
12. வாசலில் இருப்பவனைத் தொட்டால் உள்ளிருப்பவன் அலறுவான். அவன்
    (தொலைபேசி, அழைப்புமணி, வானொலி)

(12×1=12 புள்ளி)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இரை | ________________ | 4. | இரக்கம் | ________________ |
| 2. | பணி | ________________ | 5. | படித்தல் | ________________ |
| 3. | கண் | ________________ | 6. | வீடு | ________________ |

(6×1=6 புள்ளி)

**3. எதிர்ப்பொருட் சொல் எழுதுக.**

1. புதிய ________________ 4. தண்ணீர் ________________

2. இன்பம் ________________ 5. புகழ் ________________

3. குளிர் ________________ 6. இடம் ________________

(6×1=6 புள்ளி)

**4. தரப்பட்ட சொற்களை வைத்து திருக்குறள்களை நிறைவு செய்க.**

| காய்கவர்ந் | உளவாக | கூறல் |
|---|---|---|

1. இனிய ____________________ இன்னாத ____________________

கனியிருப்பக் ____________________ தற்று.

| இழுக்கு | துணிக | கருமம் |
|---|---|---|

2. எண்ணித் ________________ ________________ துணிந்தபின்

எண்ணுவம் என்பது ____________________.

(6×1=6 புள்ளி)

**5. பொருத்தமான முடிக்கும் பகுதியை எழுதுக.**

1. காற்றுள்ள போதே ________________________

2. ஐந்தில் வளையாதது ________________________

3. குயில் இனிமையாகக் ________________________

4. நாம் கண்களால் ________________________

5. வாழைப்பழத்தின் சுவை ________________________

6. ஈழவன் ஓவியம் ________________________



(6×1½=9 புள்ளி)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 'ஈருருளி' என எதனை அழைப்பர்?

______________________________

2. மக்களின் இன்பதுன்பங்கள் பற்றிக் கூறும் பாடல்கள் எவை?

______________________________

3. தைப்பொங்கல் கொண்டாடப்பெறும் திங்கள் எது?

______________________________

4. தாச்சி விளையாட்டு எத்தனை குழுவாகப் பிரித்து விளையாடப்படும்?

______________________________

5. செவிலியர் அணியும் சீருடையின் நிறம் என்ன?

______________________________

6. 'சின்னஞ் சிறுகிளியே கண்ணம்மா …' என்ற பாடலைப் பாடியவர் யார்?

______________________________

7. திருக்குறளுக்குரிய வேறு பெயர்கள் இரண்டு தருக.

______________________________

8. பழங்கள் உண்பதால் ஏற்படும் நன்மைகள் எவை?

______________________________

(8×1=8 புள்ளி)

**7. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து எழுதுக.**

1. நான் நேற்று நண்பனின் வீட்டில் உணவு ______________ (உண்)
2. மாணவர்கள் நாளை சுற்றுலாச் ______________ (செல்)
3. சிறுவர்கள் இன்று குளத்தில் ______________ (நீந்து)
4. குருவி ______________ கூடு கட்டியது. (மரம் + இல்)
5. பூக்கள் ______________ மலர்ந்தன. (காலை + இல்)
6. நாம் ______________ ச் சுத்தமாக வைத்திருப்போம். (வீடு + ஐ)

(6×1½=9 புள்ளி)

**8. எடுத்துக்காட்டைப் பார்த்து எழுதுக.**

**எ+கா:** அண்ணா பணிக்குச் சென்றார். அக்கா பணிக்குச் சென்றார்.

**அண்ணாவும் அக்காவும் பணிக்குச் சென்றார்கள்.**

1. சேரன் கதை எழுதினான். பாவலன் கதை எழுதினான்.

___

2. கீரி சண்டை செய்தது. பாம்பு சண்டை செய்தது.

___

3. ஓவியா இனிமையாகப் பாடினாள். வளவன் இனிமையாகப் பாடினான்.

___

(3×1=3 புள்ளி)

**9. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

1. ஜெனீவா நகரம் 2. திருக்குறள் 3. எனது பள்ளி

1. ___

___

2. ___

___

3. ___

___

4. ___

___

5. ___

___

6. ___

___



(6 புள்ளி)

## பகுதி 2

1. **கீழ்க்காணும் படங்களுக்குரிய வாக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.**

காலை உணவு உண்டேன்.

நித்திரை விட்டு எழுந்தேன்.

கடவுளை வணங்கினேன்.

சுத்தமாகக் குளித்தேன்.

பள்ளிக்குச் சென்றேன்.

பற்களைத் துலக்கினேன்.

 ______________________________

 ______________________________

 ______________________________

 ______________________________

 ______________________________

 ______________________________

(6×1=6 புள்ளி)

**2. கீழ்க்காணும் பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வேடன் ஒருவன் காட்டில் மான் ஒன்றைத் துரத்தினான். மான் ஓடிச் சென்றது. வழியில் பற்றை ஒன்றைக் கண்டு அதனுள் மறைந்து கொண்டது. மானைக் காணாத வேடன் அந்த இடத்தை விட்டு மெல்ல நடந்தான். வேடன் போய்விட்டான் என நினைத்த மான் பற்றையில் இருந்த செடிகளின் இலைகளைத் தின்னத் தொடங்கியது. இலைகள் அசையும் சத்தம் கேட்ட வேடன் திரும்பிப் பார்த்தான். அப்பொழுது அவன் மானைக் கண்டான். அம்பை எய்தான். அது மானின் முதுகில் குத்தியது. மான் இறக்கும் போது 'எந்த இலைகள் என்னை மறைத்ததோ அதற்கே துரோகம் செய்து அதனைத் தின்னத் தொடங்கினேன். அதனால் எனக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான்' என நினைத்து இறந்து போனது.

நீதிக் கருத்து: நன்றி மறப்பது நன்றன்று.

1. வேடன் எதைத் துரத்தினான்?

   ________________________________________

2. அது எங்கே மறைந்தது?

   ________________________________________

3. மான் எதனைத் தின்னத் தொடங்கியது?

   ________________________________________

4. வேடன் ஏன் திரும்பிப் பார்த்தான்?

   ________________________________________

5. மானின் உடலில் அம்பு எங்கே குத்தியது?

   ________________________________________

6. இக் கதையிலிருந்து அறிந்து கொள்ளும் நீதிக் கருத்து யாது?

   ________________________________________

(6×1½=9 புள்ளி)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |